TNVR140001232014

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

முன்னிலை:– **திருமதி. S.ஆனந்தவல்லி,B.A.,B.L.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை.

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 30 ம் நாள் செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண்.203/2014

*****

1. நாகராஜன் (இறந்துவிட்டார்)
2.தங்கமீனா
3.தங்ககார்த்தி
4.தங்கபிரகாஷ் ...... வாதிகள்

/எதிரிடை/

1. விஜயலட்சுமி
2. கலைமதி ...... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 19.09.2014 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 15.06.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.லாவண்யா அவர்கள் முன்னிலையாகியும், 1 ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.பெருமாள்சாமி அவர்கள் முன்னிலையாகியும் 2 ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் இருந்த நிலையில், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும் .....

## தீர்ப்புரை

தாவா சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும், அதன் தொடர்ச்சியாக தாவாச்சொத்தின் அனுபவத்தை நிர்வில்லங்கமாக 2 முதல் 4 வரையான வாதிகள் வசம் பிரதிவாதிகள் ஒப்படைக்கும்படிக்கும், தாவாச்சொத்தில் வாதிகளின் அனுபவத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும்வண்ணம் பிரதிவாதிகள் செய்துள்ள சட்டவிரோதமான, அக்கிரம ஆக்கிரமிப்புகளைச் சமூகம் நீதிமன்றம் குறிப்பிடும் காலஅவகாசத்திற்குள் பிரதிவாதிகள் அப்புறப்படுத்த வேண்டும் என்றும், தவறினால் வாதிகள் அவரது செலவில் அப்புறப்படுத்தி அதற்கான செலவுத்தொகையை பிரதிவாதிகளிடம் வசூலித்துக்கொள்ள ஏதுவாக பிரதிவாதிகள் மீது ஓர் செயலுறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கக்கோரியும், தாவாச்சொத்தின் மார்க்கமாக பிரதிவாதிகள் அவர்களது வீட்டின் கழிவுநீரையும், மழைத்தண்ணீரையும் கடத்தக்கூடாது என்று பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கக்கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகையினை வாதிக்கு, பிரதிவாதிகளை கொடுக்க சொல்லியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

2. **வாதி தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம் :–**

(1) தாவாச்சொத்தானது ஆதியில் முத்துச்சாமி நாடாருக்கு பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி முத்துச்சாமி நாடார் அவரது மூத்த மகன் டாக்டர். முத்துச்சாமிக்கு கடந்த 31.08.1981ம் தேதியிட்ட பதிவு செய்த தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார். அதனை ஒத்துக்கொண்ட டாக்டர்.முத்துச்சாமி அவர்கள் தாவாச்சொத்தினை வாதிக்கு 18.04.1988–ம் தேதி பதிவு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி கிரைய தேதிமுதல் 1ம்வாதியே தாவாச்சொத்தை தனது தனித்த சொத்தாக எந்தவொரு இடைஞ்சலுமின்றி அனுபவித்து வந்தார். தாவாச்சொத்துக்கு மேற்கே உள்ள சொத்தானது வாதிகளுக்கு பூர்வீக பாத்தியமான சொத்தாகும். அதில் 1ம்வாதியின் தாயார் உண்ணாமலையம்மாள் 1ம்வாதியின் சகோதரர்கள் ஞானமணி, பவுன்ராஜன் ஆகியோர் அவர்களுக்குரிய பாகத்தை கடந்த

17.10.1986–ம் தேதி 1ம்வாதிக்கு பதிவு செய்த விடுதலைசாசனம் எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

(2) தாவாச்சொத்தின் மேற்கே 1ம்வாதிக்கு பூர்வீக பாத்தியமான வீடும், கிழமேலாக 3 அடி அகல காலியிடமும் இருந்தது. 1ம்வாதிக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்திலும், 18.04.1988–ம் தேதியிட்ட பதிவு கிரைய சாசனத்தின்படிக்கு கிரையம் பெற்ற சொத்தின் தென்புறம் 2 அடியில் மட்டும் வீடுகட்டிவிட்டு தென்புறம் கிழமேலாக 1.1/2 அடி காலியிடம் விட்டு வீடு கட்டியுள்ளார். மேற்படி கிரைய சொத்தின் வடக்கே 5.3/4 அடி இடத்தை காலியிடமாகவே வைத்துள்ளார். கிரையச்சொத்தின் தென்புறத்திலிருந்து வடக்காக 17 அடி வரை மட்டுமே வாதி கட்டிடம் கட்டியுள்ளார். மேற்படி 17 அடி வடக்கு 1ம் வாதி கிரையம் சொத்தில் கிழமேலாக 2.1/4 அடி இடத்தை 1ம்வாதி காலியிடமாக வைத்து அனுபவித்து வருகின்றார். 1ம்வாதி அவருடைய கிரைய நிலத்தில் 1 அடி அகல வாய்க்கால் அமைத்து வடபுறம் உள்ள பிரதான வாய்க்காலில் கழிவுநீர் கடத்தி அனுபவித்து வருகின்றார். மீதமுள்ள காலிநிலத்தை 1ம்வாதி அவரது வீட்டின் கிழக்குச்சுவரை மராமத்து பார்க்க வேண்டி அவருடைய சொந்த உபயோகத்திற்கு வைத்துள்ளார். 1ம்வாதி வீட்டின் கிழக்குச்சுவரில் ஜன்னல்கள் மற்றும் கழிவுநீர் குழாய்கள். மழைத்தண்ணீர் விழும் தூம்புக்குழாய்க்கள் அமைக்கப்பட்டுள்ளது.

(3) கடந்த 2013ம் ஆண்டு ஆரம்பவாக்கில். 1ம்வாதி புனே சென்றிருந்தபோது தாவாச்சொத்தின் மார்க்கமாக ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதிகள் வீட்டின் கழிவுநீர் வாய்க்காலை கடத்த சிமிண்டால் ஆன புதிய வாய்க்காலை பிரதிவாதிகள் அமைத்துவிட்டார்கள். 1ம்வாதி அருப்புக்கோட்டைக்கு வந்து பார்த்தவுடன் அதிர்ச்சியடைந்து 1ம்பிரதிவாதியின் மகன் சரவணனை நேரில் சந்தித்து மேற்படி வாய்க்காலை அப்புறப்படுத்தும்படிக்கு கேட்டதில், அளந்து பார்க்காமல் கட்டிவிட்டதால் 3 மாதங்களுக்குள் அப்புறப்படத்திவிடுவதாக உறுதிமொழி அளித்ததின் பேரில் 1ம்வாதி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2013ம் ஆண்டு பிப்ரவரி மாதவாக்கில் மீண்டும் பிரதிவாதிகளது அக்கிரம, அதாட்டிய தற்காலிக ஆக்கிரமிப்புகளை அகற்றிக்

கொள்ளுமாறு 1ம்வாதி நேரடியாக தெரிவித்ததில்,வீண் சாக்குப்போக்குகள் கூறி வீண்காலம் கடத்தி வந்தார்கள்.எனவே 1ம்வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக 1ம்பிரதிவாதியின் மகன் சரவணனுக்கு 10.06.2013–ம் தேதி அறிவிப்பு அனுப்பினார். அதனைப் பெற்றுக்கொண்ட சரவணன் அவர்கள் கடந்த 13.06.2013–ம் தேதி பொய்யும் புரட்டுமான சங்கதிகள் கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள். மேற்படி அறிவிப்பின் பின்னர் தான் பிரதிவாதிகளின் ஆவண விபரங்களை சார்பதிவு அலுவலகத்தில் நகல் எடுத்து அறிய முடிந்தது.

(4) 1ம்பிரதிவாதியின் மருமகள்தான் 2ம்பிரதிவாதி. 1ம்வாதி கடந்த 18.4.1998–ம் தேதியிலும், 1ம்பிரதிவாதியின் முன்சுவான்தார்களும், சகோதரர்களுமான மகேந்திரன் மற்றும் அருணாசலம் ஆகியோர் 8.5.1998–ம் தேதியிலும் கிரையம் பெற்ற நபர் டாக்டர். முத்துச்சாமி என்ற ஒரே நபர் ஆவார். தாவாச்சொத்தினை 1ம்வாதியே முதன்முதலில் கிரையம் பெற்றுள்ளார். 1ம்வாதிக்கு கிரையம் கொடுத்த டாக்டர். முத்துச்சாமிக்கு 31.08.1981–ம் தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட்படிக்கு கூடுதலான அடி அளவுகள் தெரிவித்து தானம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதுபோல் பூமியில் இடமில்லை. 1ம்வாதி மற்றும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தும் 31.08.1981–ம் தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணத்திலேயே மேற்குமாலாக "குமாரசாமி நாடார் வகையறா. பழனிச்சாமி நாடார் இவர்கள் வீட்டுக்கும், பொதுச்சந்துக்கும் கிழக்கு என்றுதான் மால் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதிக்கு கடந்த 18.4.1998ம் தேதி டாக்டர். முத்துச்சாமி அவர்கள் கிரையம் கொடுக்கும்போது மேற்குமாலாக, "தங்கள் வீட்டுக்கும், தங்களின் 3 அடி அகல காலியிடத்துக்கும் (கிழக்கு) என்றே மால் காண்பித்துள்ளார். மேற்படி கிரைய ஆவணம் Subsequent Purchaser களான பிரதிவாதிகளை கட்டுப்படுத்தும் ஆவணமாகும். பிரதிவாதிகளும், அவர்களுக்கு கிரையம் கொடுத்த நபர்களும் Caveat Emptor Principle ஐ கடைப்பிடித்து கிரையம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(5) 1ம்வாதி மற்றும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தும் 31.8.1981ம் தேதியிட்ட பதிவு தானசெட்டில்மெண்ட் செட்டில்மெண்ட் ஆவணபடிக்கு தென்வடல் 96.1/4 அடி

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் டவுண் சர்வேபடிக்கு தென்வடல் மேல்புறம் 28.9 மீட்டர் (94.8 அடி) மட்டுமே பாத்தியமாகும். செட்டில்மெண்ட் ஆவணப்பபடிக்கு கிழமேல் தென்புறம் 56.3/4 அடி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் டவுண் சர்வேபடிக்கு கிழமேல் தென்புறம் 16.1 மீட்டர் (52.8 அடி) மட்டுமே பாத்தியமாகும். வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பினருக்கு கிரையம் கொடுத்த மூலச்சுவான்தாருக்கு அவரது செட்டில்மெண்ட் ஆவணத்தின்படிக்கு கூடுதலான அடிஅளவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதால் தான் அதன் தொடர்ச்சியாக வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டு வருகின்றது. இருப்பினும் வாதியே முதல் கிரையதார் என்பதனால் அவருக்கே முதல் உரிமை உள்ளது. வாதிக்கு டாக்டர். முத்துச்சாமி அவர்கள் கிரையம் கொடுத்த இடத்தை நீக்கியே பிரதிவாதிகளும், அவர்களுக்கு கிரையம் கொடுத்த நபர்களும் அடுத்த கிரையம் வாங்க வேண்டும் என்பதே விதி. ஆனால் 1ம்பிரதிவாதிக்கு 30.8.2006–ம் தேதி கிரையம் கொடுத்த மகேந்திரன், அருணாசலம் சகோதரர்கள் வாதி பெற்ற பதிவு கிரையத்தை மறைத்து மேற்குமாலாக. "நாகராஜன் வகையறா வீட்டுக்கும் கிழக்கு என்று பொய்யுரைக்கப்பட்டுள்ளது. அதனை வைத்தே பிரதிவாதிகள் 1ம்வாதியுடன் வீண்தர்க்கம் செய்து வருகிறார்கள் என்பதே உண்மை நிலையாகும்.

(6) 10.9.2014ம் தேதி பிரதிவாதிகள் தாவாச்சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யவேண்டி குத்துக்கல் ஊன்றி தாவாச்சொத்தில் தென்வடலாக 10 அடிக்கு மட்டும் கம்பிகட்டி நூதனமாற்றங்கள் செய்துவிட்டார்கள். 2ம்பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள இடத்தில் அமைந்துள்ள வீட்டுக்கழிவுநீரை வாதிகளின் வாய்க்கால் வழியாக அவர்கள் அனுமதியின்றி கழிவு தண்ணீரை கடத்த வேண்டி அடியாட்கள் துணையுடன் பிரதிவாதிகள் வகையறாவினர் கூடினார். அதனை மிகுந்த பிரயாசையில் தடுக்க சென்ற 1ம்வாதியை வயோதிகன் என்றும் பாராமல் விரட்டிவிட்டனர். எனவே வீண்விவகாரத்தை தவிர்க்க வேண்டியும். தாவாச்சொத்தில் பிரதிவாதியின் அக்கிரம, சட்ட விரோத ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டியும் தாவா வழக்கு தாக்கல்.

(7) 1ம்பிரதிவாதிக்கு கிரைய பாத்தியமான இடத்தின் மேற்கே. 2ம்பிரதிவாதி வீட்டுக்கழிவு நீரை வாய்க்கால் மூலம் கடத்தவேண்டிய அவசியமும் கிடையாது. தாவா வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம்வாதி 07.05.2019ம் தேதி இறந்துவிட்டார். அவருக்கு 2 முதல் 4 வரை வாதிகள் மக்கள் என்ற முறையில் வாரிசுகளாக இருக்கிறார்கள். 1ம்வாதியின் மனைவி பிச்சைமணி முன்பே இறந்துவிட்டார். வேறு வாரிசுகள் எவரும் இல்லை. இறந்துபோன 1ம்வாதியின் மக்கள் இவ்வழக்கில் பிரதிவாதிகளின் மீது தீர்ப்பு பெறுவதற்காக 2 முதல் 4 வரை வாதிகளாக சேர்ந்துள்ளார்கள். எனவே வாதியால் இந்த வழக்கு தாக்கல்.

3. <u>பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>:–

(1) வாதி பிராதுடன் இணைத்து தாக்கல் செய்துள்ள வரைபடம் பொய்யானதாகும்.கடந்த 18.04.1988–ம் தேதி வாதிக்கு டாக்டர் முத்துச்சாமி சொத்தை கிரையம் கொடுத்ததாக தாக்கல் செய்துள்ள கிரையப்பத்திரமானது பொய்யானதாகும்.அக்கிரையப்பத்திரத்தில் கூறியுள்ள சர்வே எண்.167/309 என்பதும் பொய்யானதாகும். அப்பத்திரத்தில் உள்ள விஸ்தீரண அளவுகள் மற்றும் நான்குமால் அளவுகள் யாவும் பொய்யானதாகும். மேலும் வாதி, மேற்படி டாக்டர்.மு.முத்துச்சாமி அவர்களின் கையெழுத்தை காண்பிக்கின்ற கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்யாமல், சார்பதிவாளர் அலுவலக நகலை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால்,க்ஷ ஆவணமானது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மேலும் வாதி கிரையப்பத்திரத்தின் படி 2 அடியில் மட்டும் வீடு கட்டியுள்ளார் என்று கூறுவது நம்ப முடியாததாக உள்ளது. மேலும் 5.3/4 அடி இடத்தை காலியிடமாகவே வைத்துள்ளார் என்று கூறும் வாதி, அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்பதை கூறவில்லை. வாதியின் கிரையப்பத்திரமானது, முன்பத்திரங்களை பின்பற்றவில்லை.

(2) மேலும் பிராதில், வாதியின் விலாசத்தில் கூறப்பட்டிருக்கும் கதவு எண்.4 ஏ என்பதும் பொய்யானதாகும். மேலும் வாதி அவருடைய வீட்டின் மொத்த

விஸ்தீரணத்தையும், கிழமேல் தென்வடல் அளவுகளையும் தெளிவாக கூறவில்லை. மேலும் வாதி அவரது வீட்டினுடைய சர்வே எண், வரி விதிப்பு எண் ஆகியவைகளையும் கூறவில்லை. ஏனெனில், வாதி அவருடைய வீட்டின் விபரங்களை பற்றி தெளிவாக கூறும் நிலையில், வழக்கிடைச் சொத்தானது முற்றிலும் பொய்யானது என்று தெளிவாக தெரிந்து விடும் என்பதினால் தான், வாதி வீட்டின் விபரங்களை வேண்டுமென்றே கூறாமல் விட்டுள்ளார். மேலும் வாதி, தென்வடல் தெருவும், கிழமேல் தெருவையும் ஆக்கிரமித்து கட்டிடங்கள் கட்டியிருப்பதால் தான் அவரால் அவரது வீட்டை பற்றிய விபரங்களை கூறாமல் விட்டுள்ளார். வாதி பிராதுடன் தாக்கல்செய்துள்ள 17.10.1986–ம் தேதிய விடுதலை சாசனமானது பொய்யானதாகும். அப்பத்திரத்தில் கண்டுள்ள, வாதியின் தாயார் உண்ணாமலையம்மாள். வாதியின் சகோதரர்கள் ஞானமணி, பவுன்ராஜன் ஆகியோருக்கு எவ்வாறு பாத்தியம் என்பது தெளிவான விளக்கங்கள் இல்லை. மேலும் மேற்படி விடுதலைப்பத்திரமானது முரணான கொண்டுள்ளது. மற்றும் பொய்யான அளவுகளைக் விஸ்தீரண விடுதலைப்பத்திரமானது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மேலும் விடுதலைப்பத்திரமானது இப்பிரதிவாதிகளை எதிலும் கட்டுப்படுத்தாது.

(3) வாதி அவருடைய மூதாதையர்களின் முதலெழுத்துக்களை தவறாக குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு குறிப்பிடுவது மற்றவருடைய சொத்துக்களை அபகரிப்பதற்காக புனையப்பட்டதாகும். மேலும் வாதி அவருடைய வீடு சம்பந்தமாக பொய்யான ஆவணங்களையே உற்பத்தி செய்து வைத்திருக்கிறார். வாதியின் வீட்டிற்கு என்று தெளிவான, நிலையான ஆவணங்கள் இல்லை. மேலும் வாதி தாக்கல் செய்துள்ள 28.02.2013–ம் தேதிய பட்டா மாறுதல் உத்திரவில் கண்ட சொத்திற்கும். இப்பிராது சொத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அச்சொத்தானது வழக்கிடைச் சொத்திற்கு அருகிலும் இல்லை. மேலும் மேற்படி பட்டா மாறுதல் உத்திரவினை வாதி ஆட்சேபித்ததாக கூறாத நிலையில், மேற்படி பட்டா மாறுதல் உத்திரவானது உண்மையானதாகும். மேலும் மேற்படி பட்டா மாறுதல் உத்திரவில் கண்டுள்ள

சர்வேஎண்ணைத் தான் வாதி, அவரது 10.06.2013–ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். வாதி குறிப்பிடும் 18.04.1988–ம் தேதிய கிரையப்பத்திரம் ஏற்பட்டதாக சொல்லப்படும் காலத்தில் வழக்கிடை சொத்து உள்ள பகுதியில் வீடுகளாகவே இருந்தன. அப்பகுதியில் காலியிடம் என்பது இல்லை. மேலும் இந்த பிரதிவாதிகளின் சொத்துக்களும் வீடுகளாகவே இருந்தன. பூமியில் வாதியின் வீடானது சர்வே எண்.167/312–ல் உள்ளது. சர்வே எண். 167/309–ல் டாக்டர்.மு.முத்துச்சாமிக்கு சொந்தமான வீடு இருந்தது.வீடி இரு சொத்துக்களுக்குமிடையில் காலிநிலம் என்பது இல்லை. எனவே 18.04.1988–ம் தேதிய கிரையப்பத்திரமானது பொய்யானது என்பது தெளிவாகிறது. வழக்கிடைச் சொத்தானது சர்வே எண். 309, டவுண் சர்வே எண்.125–க்குள் உள்ளது என்றும், அது வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கும் வாதி ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. மேலும் சர்வே ஆவணங்களின் அளவுகளின் படி அளவுகள் ஏதும் குறையவும் இல்லை. மேலும் பூமியில் இல்லாத இடத்தை பொறுத்து மேற்படி முத்துச்சாமிநாடார் ஆவணங்கள் ஏற்படுத்திக் கொடுக்கவும் இல்லை.வாதி பல பொய்யான சொத்து விபரங்களையும், பொருந்தாத சர்வே எண்களை குறிப்பிட்டும், பொய்யாக தாவா சொத்தினை காண்பித்தும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் வாதி குழப்பமான மற்றும் தெளிவில்லாத சங்கதிகளைக் கூறி, மாண்புமிகு நீதிமன்றத்தை ஏமாற்றி பரிகாரம் பெற முயல்கிறார்.

(4) இந்த நிர் 1–ம் பிரதிவாதி, வாதியின் வீட்டிற்கு கிழக்கே உள்ள காலிமனை நிலத்தை கடந்த 30.08.2006–ம் தேதி அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் 3248/2006–எண்ணாக பதிவுசெய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் நல்லெண்ணத்தின் பேரிலும், சரியான பிரதிபிரயோஜனத்திற்கும் கிரையம் பெற்று, சர்வ சுதந்திர பாத்தியமாய் அனுபவம் செய்து வருகிறார். இச்சொத்திற்குள் தான் 2–ம் பிரதிவாதியின் வீட்டில் இருந்து வரும் வாறுகால் சென்று, கிழமேல் பெருமாள்நாடார் தெரு வாறுகாலுடன் இணைகிறது .இவ்வாறுகாலானது இவ்வழக்கை வாதி தாக்கல் செய்வதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே கட்டப்பட்டதாகும். வாதியின் இடத்தில் மேற்படி வாறுகால்

செல்கிறது என்று கூறுவது பொய். ஆனால் இப்பிரதிவாதிகள் குடும்பத்தார்கள் வெளியூர் சென்றிருந்த சமயத்தில் தான் இந்த 1–பிரதிவாதியின் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து மேற்படி வாதி தென்வடலாக 3/4 அடி அளவுள்ள வாறுகாலை ஏற்படுத்திவிட்டார். அதனை ஆட்சேபித்தும், அகற்றவும் இப்பிரதிவாதிகள் கேட்ட போது தான். வாதி ஏதோ அவரது இடத்தில் இப்பிரதிவாதிகள் வாறுகால் அமைத்துவிட்டதாக பொய்யான சங்கதிகளைக் கூறி அவரது வழக்கறிஞர் மூலம் கடந்த 10.06.2013–ம் தேதி 1–ம் பிரதிவாதியின் மகன் சரவணனுக்கு அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பிற்கு க்ஷ சரவணன் அவரது வழக்கறிஞர் மூலம் பதில் வழக்கறிஞர் அறிவிப்பினை கடந்த 13.06.2013–ம் தேதி அனுப்பினார். ஆனால் மேற்படி அறிவிப்புக்கு பின்னர், மேற்படி வாதி, இந்த 1–ம் பிரதிவாதியின் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிய வாறுகாலை அகற்றாமல், சமூகம் நீதிமன்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டார்.

(5) மேற்படி 2–ம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியின் காலிமனை நிலத்திற்கு தென்புறம் உள்ள காலிமனை நிலத்தை கடந்த 28.08.2006–ம் தேதி அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் 3167/2006–ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்று பின்னர் அக்காலிமனைநிலத்தில் தற்போது வீடு கட்டி சர்வ சுதந்திர பாத்தியமாய் அனுபவம் செய்து வருகிறார்.க்ஷ வீட்டில் இருந்து வரும் கழிவுநீரைத் தான் வீட்டின் பின்புறமாக உள்ள இந்த 2–ம் பிரதிவாதியின் காலிமனை நிலத்தில் தென்வடல் மேற்கு புறமாக வாறுகால் அமைத்து கடத்தி வருகிறார்கள். இப்பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலத்திற்கு மேற்கு பக்கமாக, வாதிக்கு சொந்தமான சந்து என்பதோ, இடம் என்பதோ கிடையாது. மேலும் இப்பிரதிவாதிகளின் நிலம் அமைந்துள்ள சர்வே எண்.167/309–ல் க்ஷ வாதிக்கு சொந்தமானது என்று துளியளவு இடம் கூட இல்லை. இப்பிரதிவாதிகள் கிரையம் பெற்ற நிலத்திற்குரிய முன் பத்திரங்களை பார்வையிட்டும், நிலத்தை அளந்தும் அதன் பின்னரே கிரையம் பெற்றுள்ளார்கள். பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்துக்களுக்குரிய அளவுகள் கிரைய ஆவணங்களிள் படியும். சர்வே

ஆவணங்களின் படியும் ஒன்றாகவும், சரியாகவுமே உள்ளன. எனவே வாதிக்கு எவ்வகையிலும் கிரையப்பத்திரங்களையும், அவைகளுக்குரிய முன்பத்திரங்களையும் ஆட்சேபனை செய்ய எந்தவிதத்திலும் இப்பிரதிவாதிகளின் உரிமையில்லை. மேலும் அளவீடுகளின் இப்பிரதிவாதிகளின் கிரையப்பத்திரங்களை ஆட்சேபனை செய்யும் வாதி, அந்த ஆவணங்களை குறித்து உரிய பரிகாரங்களைக் கோரவில்லை. மேலும் பிரதிவாதிகளின் சொத்துக்களுக்குரிய மூலப்பத்திரமான 31.08.1981–தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள அளவீடுகளை பற்றி கேள்வி எழுப்புவதற்கு வாதிக்கு எந்தவித உரிமையும் இல்லை. வாதி பிராதில் கூறும் 18.04.1988–ம் தேதிய கிரையப்பத்திரமானது பொய்யானது ஆகும். எனவே Caveat Emptor விதி இவ்வழக்கிற்கும், இப்பிரதிவாதிகளுக்கும் பொருந்தாது. வாதி இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை. வாதியின் வழக்கில் எந்தவித வழக்குமூலமும் எழவில்லை. பிராதில் சொல்லப்பட்டுள்ள வழக்கு மூலங்கள் அனைத்தும் பொய்யானதாகும். மேலும் வாதி பிறரின் சொத்தை அபகரிக்கும் எண்ணமுடையவராகவும், பொய்யான ஆவணங்களை உருவாக்குபவராகவும் உள்ளார். வாதி சுத்தமான கரங்களுடன் சமூகம் நீதிமன்றத்தை அணுகவில்லை. வாதியின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்வழக்குரை தாக்கல்.

**4.** இவ்வழக்கின் வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து வழக்கை தீர்மானிக்கும் பொருட்டு, இந்நீதிமன்றத்தால் கீழ்கண்ட எழுவினாக்கள் 26.10.2015 தேதியில் வனையப்பட்டன.

**<u>வழக்கு எழுவினாக்கள்</u>**:–

| | |
|---|---|
| 1. | Whether the schedule properties belong to the Plaintiff? |
| 2. | Whether the Plaintiff is entitled to the relief of declaration as prayed for? |
| 3. | Whether the Plaintiff is entitled to the relief of recovery of possession as prayed for? |
| 4. | Whether the Plaintiff is entitled to the relief of Mandatory injunction as prayed for? |
| 5. | Whether the Plaintiff is entitled to the relief of Permanent injunction as prayed for? |

| | |
|---|---|
| 6. | To what other reliefs the parties are entitled to? |

**5.** வாதிகள் தரப்பில், 4ம்வாதி தங்ககார்த்தி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மாடசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம், வா.சா.ஆ.9,10 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில், சரவணன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. இருதரப்பிலும் கேட்கப்பட்டது. சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் எழுவினாக்களுக்கு கீழ்க்கண்டவாறு தீர்வு காணப்படுகிறது.

<u>எழுவினா–1 க்கான தீர்வு</u>

(1) 1ம் வாதி 1,2 பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம்வாதி இறந்துவிட்டதால் 2 முதல் 4ம் வாதிகள் 1ம் வாதியின் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1ம் வாதி 18.04.1988ம் தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம் மூலம் தாவாச்சொத்தை டாக்டர் முத்துச்சாமி என்பவரிடம் கிரையம் பெற்று அனுபவித்து வந்ததாகவும், மேற்படி டாக்டர் முத்துச்சாமிக்கு தாவாச்சொத்தும் அதனுடன் சேர்ந்த பகுதியும் 31.08.1981ம் தேதிய செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் அவரது தந்தை முத்துச்சாமி எழுதிக்கொடுத்ததாகவும் அதன்படி அனுபவம் செய்துவந்ததில் 1ம் வாதி ஊருக்கு சென்றிருந்த சமயத்தில் பிரதிவாதிகள் தாவாச்சொத்தில் சாக்கடை வாய்க்கால் அமைத்துவிட்டதாகவும் அதனை அகற்ற சொல்லி கேட்டதற்கு முதலில் ஒப்புக்கொண்டு பின்னர் மறுத்ததாக சொல்லி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதியின் மகன் 3ம் வாதியான தங்ககார்த்தி வா.சா.1 ஆக நீதிமன்றத்தில் ஆஜராகி நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார். தன் தந்தை டாக்டர் முத்துச்சாமியிடம் கிரையம் பெற்ற கிரைய

ஆவணம் வா.சா.ஆ.1 ஆகவும், டாக்டர் முத்துச்சாமிக்கு அவரது தந்தை எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் வா.சா.ஆ.2 ஆகவும், 1ம் பிரதிவாதி மகேந்திரன், அருணாச்சலத்திடம் பெற்ற பதிவு கிரைய ஆவணம் வா.சா.ஆ.3 ஆகவும் 1ம் வாதிக்கு அவரது தாய், சகோதரர்கள் எழுதிக்கொடுத்த பாகவிடுதலை ஆவணம் வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.5 ஆகவும், அதற்கு 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகவும், தாவாச்சொத்திற்கான வில்லங்கசான்று வா.சா.ஆ.7 ஆகவும், தாவாச்சொத்திற்கான புகைப்படம் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(2) வாதியின் வழக்கானது தாவாச்சொத்திற்கு மேற்கே வாதிக்கு பாத்தியமான வீடு இருப்பதாகவும் மேற்படி வீட்டை வா.சா.ஆ.4 ன்படி அவரது தாயாரும், சகோதரரும் பாகவிடுதலை எழுதிக்கொடுத்துவிட்டதாவும் தாவாச்சொத்தை வா.சா.ஆ.1 ன்படி கிரையம் பெற்று அதில் கிழமேல் தென்புறம் 3.1/2 அடியில் 2 அடியில் மட்டும் வீடுகட்டிவிட்டு மீதி 1.1/2 அடியும் கிழமேல் வடபுறம் 5.3/4 அடியும் காலியிடமாக வைத்து அனுபவம் செய்துவருவதாகவும் மேற்படி இடம்தான் தாவாச்சொத்து என்றும் தாவாச்சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது என்றும், வாதி ஊருக்கு சென்றதை பயன்படுத்தி தாவாச்சொத்தில் அக்கிரமமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்றும் தாவாச்சொத்தின் அனுபவத்தை வாதி வசம் ஒப்படைக்கவும் அதில் ஏற்படுத்தியுள்ள கட்டுமானங்களை அப்புறப்படுத்தவும் தாவாச்சொத்து வாதிகளுக்கு மட்டும் தனித்துப்பாத்தியமானது என விளம்புகை மற்றும் அதன் தொடர்ச்சியாக பிரதிவாதிகள் தாவாச்சொத்தை பயன்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல். பிரதிவாதிகள் தரப்பில் தாவாச்சொத்து பி.வா.சா.ஆ.1 ன்படி மகேந்திரன் மற்றும் அருணாச்சலம் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும் வாதி பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து வைத்திருப்பதாகவும் டாக்டர் முத்துச்சாமிக்கு சொந்தமான வீடு சர்வே எண்.167/309 இருந்தது என்று வாதியின் வீடு சர்வே

எண்.167/312 ல் இருந்தது என்றும் இருசொத்துக்களுக்கும் இடையில் காலி நிலம் இல்லை என்றும் தாவாச்சொத்து சர்வே எண்.125 ல் உள்ளது என்றும் அது வாதிக்கு பாத்தியம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் சர்வே ஆவணங்களின்படி அளவுகள் எதுவும் குறையவில்லை என்று 1ம் பிரதிவாதி வாதியின் வீட்டிற்கு கிழக்கே உள்ள காலிமனை நிலத்தை 30.08.2006 ம் தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றும் 2ம் பிரதிவாதியின் வீட்டிலிருந்து வரும் வாறுகால் கிழமேல் பெருமாள்நாடார் தெருவின் வாறுகாலுடன் இணைகிறது என்றும் வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு இரண்டு வருடம் முன்பு அது கட்டப்பட்டது என்றும் வாதி வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ள விசயங்கள் பொய்யானவை என்றும் 1ம் பிரதிவாதியின் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து வாதி வாறுகால் கட்டிவிட்டு அதனை அகற்றாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதிவாதிகளுக்கு சொந்தமான நிலத்திற்கு மேற்குபுறம் வாதிக்கு சொந்தமான சந்து, இடம் எதுவும் இல்லை என்றும் வாதிக்கு எவ்வகையிலும் பிரதிவாதிகளின் கிரையப்பத்திரங்களையும் முன்பத்திரங்களையும் ஆட்சபேணை செய்ய உரிமையில்லை என்றும் 18.04.1988 ம் தேதிய கிரையப்பத்திரமே பொய்யானது என்று வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது சர்வே எண்.128 ல் தாவாச்சொத்து இருப்பதாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டு சர்வே எண்.125 ல் தாவாச்சொத்து இருப்பதாக பிராது தாக்கல் செய்துள்ளார் அவரது வழக்கு முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றும் வாதிடப்பட்டது.

(3) பிரதிவாதிகள் தரப்பில் 1ம் வாதி கிரையம் பெற்ற 18.04.1988 ம் தேதிய கிரைய ஆவணத்தை பொய்யான ஆவணம் என்று மறுப்பு தெரிவித்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி 2006 ம் வருடம் மகேந்திரன், அருணாச்சலம் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். மேற்படி மகேந்திரன், அருணாச்சலம் வாதி கிரையம் பெற்ற டாக்டர் முத்துச்சாமி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளனர். 1981 ம் வருட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி டாக்டர் முத்துச்சாமிக்கு கிடைக்கப்பெற்ற

இடத்தை தான் வாதிக்கும் 1,2 பிரதிவாதிகளுக்கும் அவர் எழுதிக்கொடுத்துள்ளார். டாக்டர் முத்துச்சாமியிடமிருந்து மகேந்திரன், அருணாச்சலம் ஆகியோர் கிரையம் பெற்ற ஆவணத்தை இருதரப்பிலும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1ன்படி 1ம் வாதிக்கு டாக்டர் முத்துச்சாமி சர்வே எண்.167/309ல் கிழமேல் தென்புறம் 3.1/2 அடி கிழமேல் வடபுறம் 5.3/4 அடி தென்வடல் 27 அடி இடத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. தாவாச்சொத்திற்கும் மேற்கே உள்ள இடம் வாதிக்கு பூர்வீக பாத்தியம் என சொல்லப்பட்டுள்ளது அதற்கான ஆவணம் வா.சா.ஆ.4 1ம் வாதியின் தாயார், சகோதரர்கள் அவர்களது பாகத்தை பொறுத்து விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளனர் அந்த ஆவணத்தில் தாவாச்சொத்திற்கு மேற்கே உள்ள இடத்தில் ஒரு வீடு உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கே உள்ள இடத்திற்கு தெற்கே 1ம் வாதியின் சகோதரர் இருப்பதாக நான்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, தாவாச்சொத்திற்கும் மேற்கே உள்ள பகுதி 1ம் வாதிக்கு பாத்தியமான பூர்வீக சொத்து என்பதற்கு ஆதரவாக வா.சா.ஆ.4 உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(4) வா.சா.ஆ.4ல் உள்ள நான்குமாலை பார்க்கும்போது பவுன்ராஜன் கைவசமுள்ள 5 எண்ணுள்ள வீட்டிற்கும் பொதுச்சுவருக்கும் வடக்கு, கிழமேலாகவும் தென்வடலாகவும் உள்ள வீதிக்கும் தெற்கு 7 ஜாதியடி அகலமுள்ள தென்வடலான நம் வகையறா சொந்த சந்திற்கும் கிழக்கு 8 எண்ணுள்ள முதலாளி முத்துசாமிநாடார் வீட்டிற்கும் மேற்கு இதற்குள் கீழ்புறம், மேல்புறம் இந்த வீட்டின் சொந்தசுவர்களும் கீழ்புறம் இந்தவீட்டின் சொந்த சந்தும் உள்பட கிழமேல் இருதலையும் அடி 22 தென்புறம் பொதுச்சுவரில் பாதி பாத்தியம் வடபுறம் சொந்தசுவரும் சுவரடி இடமும் உள்பட தென்வடல் அடி 20 அளவுள்ள மனைநிலம் என காண்பிக்கப்பட்டுள்ளது. இதில் பவுன்ராஜன் 1ம் வாதியின் சகோதரர் ஆவார். 1ம் வாதியின் பூர்வீகசொத்திற்கும் தெற்கே அவரது சகோதரர் பவுன்ராஜின் 5ம் நம்பர் வீடு இருந்துள்ளது இருவருக்கும் பொதுச்சுவர் இருந்துள்ளது. அதற்கும் மேற்கே வாதியின் குடும்பத்தார் புழங்கிக்கொள்ள

பொதுச்சுவர் ஏற்படுத்தி வந்துள்ளனர் என்பதும் தெரியவருகிறது. கிழக்கே முத்துச்சாமி நாடார் வீட்டினை எல்கை மாலாக காண்பித்துள்ளனர். வா.சா.ஆ.4 ஆவணம் வாதியின் குடும்பத்தாரால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. வாதி தாவாச்சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு வா.சா.ஆ.4 ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(5) தாவாச்சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு வரைபடம், அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த வரைபடத்தில் வாதியின் வீடு கிழமேல் 22.1/4 அடி இருப்பதாக குறிப்பிட்டு காண்பித்துள்ளார். தென்வடல் 27 அடியும் காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ன்படி வாதிக்கு பூர்வீகச்சொத்து தாவா சொத்திற்கும் மேற்கே கிழமேல் 20 அடி. பிராதில் வாதி சொல்லியுள்ள படி வா.சா.ஆ.1 ன்படி கிரையம் பெற்ற இடத்தில் கிழமேல் தென்புறம் 2 அடியில் வீடுகட்டியுள்ளதாக சொல்லியுள்ளார். ஆகவே, வரைபடத்தில் உள்ளபடி பூர்வீகசொத்து மற்றும் கிரையம் பெற்ற சொத்தில் கிழமேல் தென்புறம் வாதியின் வீடு இருக்கவேண்டும். ஆணையர் வரைபடத்தில் 22.1/4 அடி இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ல் 3 அடி அகல சொந்த சந்து இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. சொந்த சந்து என்பது வாதியின் பூர்வீக சொத்திற்கு மேற்கே அவர்களது வகையறா புழங்க ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், வா.சா.ஆ.4 ல் கீழ்புறம் சொந்தச்சந்து இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 லும் 3/4 அடி சந்து இருப்பதாக டாக்டர் முத்துச்சாமி எழுதிக்கொடுத்துள்ளார். ஆனால் பிரதிவாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் தாவா சொத்தில் 3/4 அடி சந்து பகுதி எதுவும் கிடையாது என அவர்களே ஒப்புக்கொண்டு அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள். ஆணையர் அறிக்கையிலும் சந்துபகுதி இருப்பதாக குறிப்பிட்டு காண்பிக்கப்படவில்லை.

(6) பிரதிவாதிகளுக்கு பி.வா.சா.ஆ.1 ன்படி கிழமேல் 32 அடி தென்வடல் 45.1/2 அடி கிரையம் பெற்றுள்ளனர். ஆணையர் வரைபடத்தில் பிரதிவாதிகளின் வீடு FDHG என்ற அளவிற்குள் பி.வா.சா.ஆ.1 ல் உள்ள அளவுகளின்படி பிரதிவாதிகளின் வீடு

அமைந்துள்ளது. அந்த அளவுகள் முழுவதுமாக பிரதிவாதிகள் வீடு கட்டப்பட்டுள்ளது என்பது ஆணையர் அறிக்கையின்படி தெரியவருகிறது. வாதியின் பூர்வீகசொத்திற்கும் கிழக்கே உள்ள சொத்தைதான் வா.சா.ஆ.1ன்படி 1ம் வாதி கிரையம் பெற்றுள்ளார். அதற்கும் கிழக்கே பிரதிவாதிகள் கிரையம் பெற்ற இடம் உள்ளது. தாவாச்சொத்திற்கும் பிரதிவாதிகள் இடத்திற்கும் இடையே பிரதிவாதிகள் அவர்களது வீட்டை ஒட்டி ஒரு அடியில் கழிவுநீர் கால்வாய் சிமிண்ட் தள அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாதியும் தாவாச்சொத்தில் கழிவுநீர் கால்வாய் ஏற்படுத்திஉள்ளார். பிரதிவாதிகளுக்கு மேற்குபகுதியில் இடம் உள்ளதா என்பதை பார்க்கும்போது அவர்களது ஆவணத்தின்படி கிழமேல் 32 அடி தென்வடல் 45.1/2 அடி பிரதிவாதிகளின் வீடு உள்ளது. அதைத்தாண்டி பிரதிவாதிகளின் இடம் உள்ளது என்பதற்கு வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 1ம் பிரதிவாதியின் மகன் சரவணன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கை மேல்நடத்தவில்லை என சொல்லி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி மேற்கொண்டு வழக்கை நடத்தாமல் விலகிக்கொண்டதற்கு குறிப்பிட்டு காரணங்கள் சொல்லப்படவில்லை. 2ம் பிரதிவாதிக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பியும் அவர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்து வழக்காட முன்வரவில்லை. அவருக்கு எதிராக 09.02.2026ம் தேதிய ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதியின் வீட்டிலிருந்து தான் கழிவுநீர் வாய்க்கால் தாவாச்சொத்தின் வழியாக கடத்தப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால், 2ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முன்வரவில்லை. 1ம் பிரதிவாதியும் நேரடியாக சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. அவரது மகன்தான் சாட்சியம் அளித்துள்ளார். பி.வா.சா.1ன் சாட்சியத்தில் ஆணையர் வரைபடத்தில் பிரதிவாதிகளின் வீடு அளந்து குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் சரிதான் என்றும், கழிவுநீர் வாய்க்கால் பகுதிக்கு மேற்கே தான் பாத்தியம் கோரவில்லை என்றும் அதனை பொறுத்து வாதிக்கு தீர்ப்பு செய்வதற்கு தனக்கு ஆட்சேபணையில்லை என்றும் சொல்லியுள்ளார்.

(7) பிரதிவாதிகள் சாக்கடை வாய்க்காலுக்கும் அடுத்து 5 அடி உயரமுள்ள ஒரு குத்துக்கல் 1ம் பிரதிவாதி நட்டுவைத்துள்ளார் என்பதையும் அவர் சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். பி.வா.சா.ஆ.2 முதல் 4,6 பிரதிவாதிகளின் வீடு சம்பந்தமான ஆவணங்கள். பி.வா.சா.ஆ.5 1ம் பிரதிவாதி தரப்பில் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு அந்த பதில் அறிவிப்பில் 1ம் வாதியின் வீட்டிற்கு கிழக்கே அவருக்கு இடமில்லை என்றும் அந்த இடம் பிரதிவாதிக்கு பாத்தியமானது என்றும் ஆட்சேபணை செய்து பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற மகேந்திரன், அருணாச்சலம் ஆகியோர் பி.வா.சா.ஆ.1ல் 1ம் வாதியின் வீட்டிற்கும் கிழக்கு என நான்குமால் காண்பித்துள்ளனர். அதனடிப்படையிலேயே பிரதிவாதிகள் தாவாச்சொத்தை பாத்தியம் கோருகின்றனர் என்பது தெரியவருகிறது. மேற்படி பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த நபர்கள் அவர்கள் டாக்டர் முத்துச்சாமியிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணத்தை தாக்கல் செய்து அந்த ஆவணத்திலும் பி.வா.சா.ஆ.1ல் உள்ளதுபோல் நான்குமால் உள்ளது என்பதற்கு ஆதரவாக தாக்கல் செய்யவில்லை. தாவாச்சொத்தின் உண்மையான உரிமையாளரான டாக்டர் முத்துச்சாமி என்பவர் பிரதிவாதிகளின் முன்சுவான்தாரர்களுக்கு எவ்வாறு நான்குமால் காண்பித்து எழுதிக்கொடுத்தார் என்பதை பொறுத்துதான் பிரதிவாதிகள் நான்குமால் காண்பித்து கிரையம் பெற்றிருக்கமுடியும். மேலும், டாக்டர் முத்துச்சாமியிடம் வாதிக்கு கிரையம் கொடுத்த ஆவணத்திலும் பிரதிவாதிகளின் ஆவணத்திலும் மொத்த அளவுகள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்பது தெரியவருகிறது. முன் ஆவணங்களை பரிசீலித்து கிரையம் பெற்றதாக சொல்லியுள்ள பிரதிவாதிகள் அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

(8) டாக்டர் முத்துச்சாமிதான் ஆதியில் தாவாச்சொத்தின் உரிமையாளர். அவரது வீட்டிற்கும் சுவருக்கும் அடுத்து முக்கால் அடி சந்து இருப்பதாக காண்பித்து வா.சா.ஆ.1ஐ எழுதிக்கொடுத்துள்ளார். அந்த ஆவணம் வாதியால் மறுக்கப்படவில்லை. ஆனால், பிரதிவாதிகளின் முன்சுவான்தாரர்களுக்கு தாவா சொத்திற்கும் கிழக்கே

உள்ள இடத்தை எழுதிக்கொடுக்கும்போது மேற்படி டாக்டர் முத்துச்சாமி எவ்வாறு காண்பித்து எழுதிக்கொடுத்தார் என்பதற்கு சாட்சிய சான்றாவணங்கள் முன்னிடவில்லை. பிரதிவாதிகளுக்கு அவர்களுடைய ஆவணத்தில் உள்ள அடி அளவில் வீடுகள் உள்ளது. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என கூறுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் அவர்களது வீட்டை ஒட்டி ஒரு அடியில் கழிவுநீர் வாய்க்கால் ஏற்படுத்தியிருப்பதாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அதற்கடுத்து வாதியின் கழிவுநீர் வாய்க்காலும், காலியிடமும் இருப்பதாகவும் அதற்கடுத்து வாதியின் வீடு இருப்பதாகவும் ஆணையர் வரைபடத்தை பார்க்கும்போது தெரியவருகிறது. ஆனால், ஆணையர் வரைபடத்தில் பிரதிவாதிகள் சாக்கடை வாய்க்கால் கட்டியுள்ள இடத்தையும் சேர்த்துதான் தாவா சொத்தான வடபுறம் 5.3/4 அடியும் தென்புறம் 1.1/2 அடியும் இருப்பதாக அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கு அவர்களுடைய வீட்டிற்கு மட்டுமே ஆவணம் உள்ளது. அந்த வகையில் பார்க்கும்போது தாவாச்சொத்து வா.சா.ஆ.1 ன்படி வாதிக்கு பாத்தியமான சொத்தாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(9) பிரதிவாதிகள் தரப்பில் சரவே எண்.128 ல் தாவாச்சொத்து இருப்பதாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டு அதற்கு முரணாக சர்வே எண்.125 ல் தாவாச்சொத்து உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அவர்கள் கிரையம் வாங்கிய சொத்து எங்குள்ளது என அவர்கள் நீதிமன்றத்திற்கு தெளிவுபட சொல்லவில்லை என வாதிடப்பட்டது. பிரதிவாதிகள் வாதத்தின்படி பார்க்கும்போது 1ம் வாதி தரப்பில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி சர்வே எண்.128 ல் தாவாச்சொத்து அடங்கும் என சொல்லப்பட்டுள்ளது. அதன்பின்னர் 1ம் பிரதிவாதியின் மகன் பதில் அறிவிப்பு அனுப்பியதில் சர்வே எண்.125 ல் தாவாச்சொத்து இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். அதன்பின்னர் மறுஅறிவிப்பு எதுவும் வாதிகளால் அனுப்பப்படவில்லை. மேற்படி அறிவிப்பில் தவறாக சொல்லியதாக பிராதில் எந்த சங்கதிகளும் சொல்லவில்லை. இருப்பினும், பிராது தாக்கல் செய்யும் போது

தாவாச்சொத்து சர்வே எண்.125ல் இருப்பதாகவே குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாச்சொத்தில் 1ம் பிரதிவாதி சாக்கடை வாய்க்கால் கட்டியுள்ளார் என்பதை பொறுத்து 1ம் வாதியால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டு பிரச்சனை எழுந்துள்ளது என்பது அறிவிப்பை பார்க்கும்போது தெரியவருகிறது. பிரதிவாதிகள் தரப்பில் வாதிகளுக்கு தாவாச்சொத்தில் பாத்தியமில்லை என்பதற்கும் தாவாச்சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என்பதற்கும் சான்றாவணங்கள் முன்னிடவில்லை. பி.வா.சா..1ன் சாட்சியம் வழக்கு சங்கதிகளை முரண்படுத்தும் அளவிற்கு அமையவில்லை. 1ம் வாதி வா.சா.ஆ.1ன்படி கிரையம் பெற்று அதனை அனுபவம் செய்துவந்துள்ளார் என்பது தெளிவாக தெரியவருகிறது. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியம். வாதிகள் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்றால் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என பரிகாரம் கேட்டு நடவடிக்கை எடுக்காமல் உள்ளதற்கு தகுந்த விளக்கம் இல்லை. பிரதிவாதிகள் அமைத்துள்ள சாக்கடை வாய்க்காலுக்கும் அடுத்து அவரே 5 அடி குத்துக்கல் அமைத்தார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். அதனை அகற்ற அவரே கடமைப்பட்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

(10) பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலேயே நான்குமாலில் பழனிச்சாமி வகையறா இடம் என்று வாதிகள் இடம் காண்பிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கும் மேற்கே வாதிகளுக்கு வீடு கிடையாது. மாடசாமி என்பவர் பெயரில் உள்ளது என குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளது. மேற்படி மாடசாமி என்பவர் 1ம் வாதியின் உடன்பிறந்த சகோதரர் பவுன்ராஜின் மகன். மாடசாமி பெயரில் பட்டா இருந்துள்ளது. பட்டா மாடசாமி பெயரில் இருந்துள்ளது என்பதற்காக மட்டுமே வழக்கு வாதிக்கு பாத்தியப்பட்டதல்ல என மறுக்க முடியாது. 1986லேயே 1ம் வாதியின் சகோதரர்கள் தாயார் அதனைப் பொறுத்து விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டனர். தாவா சொத்திற்கும் மேற்கே உள்ள இடத்தை சுற்றி வாதி வகையறா உள்ளார் என்பது வா.சா.ஆ.4ன் நான்குமாலை பார்க்கும்போதே தெரியவருகிறது. வா.சா.ஆ.4ஐ மறுக்கும் பிரதிவாதி அது சம்பந்தமாக சாட்சிய சான்றாவணம் முன்னிடவில்லை. 1ம் பிரதிவாதி

அவருடைய ஆவணத்தை பொறுத்து தான் எதிர்வாதம் செய்கிறார். பி.வா.சா.ஆ.1ல் உள்ள அளவிற்கு அவருடைய வீடு கட்டப்பட்டது என்பதனை ஆட்சேபணை செய்யவில்லை. அடி அளவுகள் அவர் ஆவணத்தின்படி சரியாக இருக்கின்ற போது நான்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ள வகைக்கு தாவா சொத்து வாதிக்கு பாத்தியமில்லை என எதிர்வாதம் செய்கிறார். அவ்வாறு வாதிக்கு பாத்தியமில்லை என்றால் தனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு 1ம் பிரதிவாதி ஆவணங்கள் தாக்கல் செய்திருக்க வேண்டும். வாதிக்கு முன்பாக 1ம் பிரதிவாதியால் தாவா சொத்து சம்பந்தமாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த வழக்கிலும் எதிர்பாத்தியம் கோரவில்லை. பிரதிவாதிகள் அவர்களுடைய வீடுகளுக்கும் மேற்கே 1 அடியில் சாக்கடை வாய்க்காலும் அறத்கு அடுத்து குத்துக்கல் 5 அடியிலும் பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ளனர் என்பது ஆணையர் அறிக்கையின்படி தெளிவாகிறது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள அளவுகள்படி சரியாக வீடுகட்டப்பட்டது என்பதால்தான் 2ம் பிரதிவாதி வழக்குநடத்த முன்வராமல் ஒருதலைபட்சமாகியுள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, மேற்கண்ட விவாதங்களிலிருந்து தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என வாதிகளுக்கு ஆதரவாக எழுவினா–1க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>எழுவினா–2 க்கான தீர்வு</u>

தாவாச்சொத்தின் அனுபவத்தில் வாதிகள் இருப்பதாக எழுவினா–1க்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்து வாதிகளுக்கு ஆதரவாக எழுவினா–2க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>எழுவினா–3 க்கான தீர்வு</u>

தாவாச்சொத்தின் அனுபவத்தில் வாதிகள் இருப்பதாக எழுவினா–1க்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் தாவாச்சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருக்கும் பிரதிவாதிகள் வீட்டை ஒட்டி மேற்கே உள்ள 1 அடி சாக்கடை கால்வாய் மற்றும் அதற்கு அடுத்து நடப்பட்டுள்ள 5 அடி குத்துக்கல் இடத்தின் அனுபவத்தை 2 முதல் 4

வரையான வாதிகள் வசம் 1 மாத காலத்திற்குள் பிரதிவாதிகள் ஒப்படைக்குமாறு என எழுவினா–3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>எழுவினா–4 க்கான தீர்வு</u>

தாவாச்சொத்தின் அனுபவத்தில் வாதிகள் இருப்பதாக எழுவினா–1 க்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் தாவாச்சொத்தில் வாதிகளின் அனுபவத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும்வண்ணம் பிரதிவாதிகள் செய்துள்ள சட்டவிரோதமான, அக்கிரம ஆக்கிரமிப்புகளை 1 மாதகாலத்திற்குள் பிரதிவாதிகள் அப்புறப்படுத்த வேண்டும் என்று பிரதிவாதிகளுக்கெதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி எழுவினா–4 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>எழுவினா–5 க்கான தீர்வு</u>

தாவாச்சொத்தின் அனுபவத்தில் வாதிகள் இருப்பதாக எழுவினா–1 க்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் தாவாச்சொத்தின் மார்க்கமாக பிரதிவாதிகள் அவர்களது வீட்டின் கழிவுநீரையும், மழைத்தண்ணீரையும் கடத்தக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கெதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா–5 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>எழுவினா–6 க்கான தீர்வு</u>

வேறு எந்த பரிகாரங்களும் இல்லை. வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு தரப்பினர்கள் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என இந்நீதிமன்றம் எழுவினா–6 க்கு தீர்வு காண்கிறது.

முடிவாக, இவ்வழக்கானது கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது.

(1) தாவா சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

(2) தாவாச்சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருக்கும் பிரதிவாதிகள் வீட்டை ஒட்டி மேற்கே உள்ள 1 அடி சாக்கடை கால்வாய் மற்றும் அதற்கு அடுத்து நடப்பட்டுள்ள 5 அடி குத்துக்கல் இடத்தின் அனுபவத்தை 2 முதல் 4 வரையான

வாதிகள் வசம் 1 மாத காலத்திற்குள் பிரதிவாதிகள் ஒப்படைக்குமாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.

(3) தாவாச்சொத்தில் வாதிகளின் அனுபவத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும்வண்ணம் பிரதிவாதிகள் செய்துள்ள சட்டவிரோதமான, அக்கிரம ஆக்கிரமிப்புகளை 1 மாதகாலத்திற்குள் பிரதிவாதிகள் அப்புறப்படுத்த வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

(4) தாவாச்சொத்தின் மார்க்கமாக பிரதிவாதிகள் அவர்களது வீட்டின் கழிவுநீரையும், மழைத்தண்ணீரையும் கடத்தக்கூடாது என்று பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

(5) செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் செய்யப்பட்டு, என்னால் படித்துப்பார்க்கப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.07.29 14:34:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்** :–

| | | |
|---|---|---|
| வா.சா.1 | 20.08.2025 | தங்ககார்த்தி |
| வா.சா.2 | 17.11.2025 | மாடசாமி |

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**:–

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 08.04.1988 | தாவாச் சொத்தை டாக்டர்.முத்துச்சாமியிடம் பெற்ற கிரைய சாசனம் சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.2 | 31.08.1981 | டாக்டர்.முத்துச்சாமிக்கு அவரது தந்தை கொடுத்த பதிவு செட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.3 | 30.08.2006 | 1ம்பிரதிவாதி மகேந்திரன் மற்றும் அருணாசலத்திடம் பெற்ற பதிவு கிரைய சாசனம் சார்பதிவக நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 17.10.1986 | 1ம்வாதிக்கு அவரது தாய் மற்றும் சகோரர்கள் எழுதிக்கொடுத்த பதிவு பாகவிடுதலை ஆவணம் சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.5 | 10.06.2013 | 1ம்வாதி வழக்கறிஞர் மூலம் 1ம்பிரதிவாதியின் மகன் சரவணனுக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | 13.06.2013 | மேற்படி அறிவிப்பிற்கான பதில் அறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ.7 | 05.03.2012 | தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.8 | --- | தாவா சொத்திற்கான புகைப்படம் எண்ணம் 4 குறுந்தகடு உடன் |
| வா.சா.ஆ.9 | | பிரதிவாதிகள் வாதிகளுடன் என்னையும் சேர்த்து அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனு சார்வு நகல் |
| வா.சா.ஆ.10 | | பிரதிவாதிகள் வாதிகளுடன் என்னையும் சேர்த்து ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனு சார்வு நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம்</u>** :-

| | | |
|---|---|---|
| பி.வா.சா.1 | 17.02.2026 | சரவணன் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்</u>** :-

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 30.08.2006 | 1ம் பிரதிவாதிக்கு பழனிச்சாமி நாடார் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.2 | --- | வீட்டு வரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.3 | --- | தண்ணீர் வரி ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.4 | --- | மின் கட்டண ரசீது இணையதள நகல் |
| பி.வா.சா.ஆ.5 | 13.06.2013 | வாதி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பிற்கு அனுப்பிய பதில் அறிவிப்பு சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.6 | --- | 01.01.1987 முதல் 04.03.2012 வரையுள்ள தாவாச்சொத்திற்குரிய வில்லங்க சான்று சான்றிட்ட நகல் |

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.07.29 14:34:45 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

-----------------------------------
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
அ.வ.எண்.203/2014
சீரான/வரைவுத் தீர்ப்புரை
நாள் – 30.06.2026
-----------------------------------